**தொழிலாளர் நீதிமன்றம், உதகமண்டலம்**

**C.P.No.06/2026** நாள்: 16.07.2026

தொ.சா.1– திரு.செந்தில்குமார் இன்று 16.07.2026 எதிர்மனுதாரர் / நிர்வாக தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை :

நான் எதிர் மனுதாரர் நிர்வாகத்தில் 1996–ல் தற்காலிக பணியாளராக சேர்ந்தேன். நான் கூறுவது தவறு என்றும் 01.06.2016 –ல் தான் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் டிரைனியாக வேலைக்கு சேர்ந்துள்ளேன் என்றால் தவறு. 2016 –ல் தான் எனக்கு டிரைனி உத்தரவு கொடுத்தார்கள். 28.06.2018 தேதிக்கு பிறகு நான் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் வேலை செய்யவில்லை என்பது சரியல்ல. 2016 முதல் 28.06.2018 வரை நிர்வாகம் என்னை தற்செயல் பணியாளராகவோ , தற்காலிக பணியாளராகவோ , நிரந்தர பணியாளராகவோ அங்கிகரித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால் 30.05.2016 ல் மெக்கானிக்காக உத்தரவு வழங்கினார்கள், அதைத் தெரிவிக்கும் உத்தரவு ஏதும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. நான் எதிர் மனுதாரர் நிர்வாகத்தில் பணிபுரிந்த போது நான் பணிக்கு சென்ற நாட்களின் அடிப்படையில் என் சம்பளத்தை கணக்கிட்டு எனது வங்கி கணக்கில் சம்பளம் செலுத்தப்பட்டு வந்தது என்பது சரி. 28.06.2018 தேதிக்கு பிறகு இதுநாள் வரை எனக்கு எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் வேலை நான் செய்யவில்லை என்றால் 2019 பிப்ரவரி வரை பணிபுரிந்தேன், அதன்பிறகு எதிர்மனுதாரர் நிர்வாகத்தால் எனக்கு வேலை எதுவும் வழங்கப்படவில்லை.

K.Shin kui
16/7/26

நான் 2016 பிறகு ஒன்றரை வருடம் டிரைனியாக இருந்தேன். 2018 ல் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் எதிர்மனுதாரர் தொழிற்சாலையை மூடியது என்ற விவரம் எனக்கு தெரியும். தமிழ்நாடு மின் வாரியம் எதிர்மனுதாரர் தொழிற்சாலைக்கு வழங்கி வந்த மின்சாரத்தை 28.06.2018 அன்று துண்டித்தது என்ற விவரம் எனக்கு தெரியும், ஆனால் இது நிர்வாகத்தின் மெத்தன போக்கால் நடந்தது. என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தில் நிர்வாகத்தில் 28.06.2018 முதல் தொழிலாளர்கள் எந்த உற்பத்தியிலும் ஈடுபடவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 8 ல் நிர்வாகம் சட்ட விரோதமாக ஊதியத்தை பிடித்தம் செய்துவிட்டதாக நான் குறிப்பிட்டுள்ளதை பொறுத்து தொழிற்தாவா எழுப்பியுள்ளேனா என்றால் எழுப்பியுள்ளேன். உண்மையில் அவ்வாறு நான் எந்த தொழிற்தாவாவும் எழுப்பவில்லை என்றும், வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக கூறுகிறேன் என்றும் சொன்னால் தவறு. எதிர்மனுதாரர் நிர்வாகம் உற்பத்திக்கான மூலப்பொருட்கள் இல்லை என்ற காரணத்திற்காகவோ, தொழிற்சாலை நஷ்டத்தில் இயங்குகிறது என்ற காரணத்திற்காகவோ தொழிற்சாலையை மூடவில்லை என்றால் கழிவு சுத்திகரிப்பு அமைக்கவில்லை என்பதினால்தான் உற்பத்தி நிறுத்தப்பட்டது. தமிழ்நாடு மின் வாரியம் மின் இணைப்பை துண்டித்ததாலும், மாசு கட்டுப்பாட்டு வாரியம் சீல் வைத்ததானால்தான் நிர்வாகத்தை இயக்க முடியவில்லை என்றால் சரி. எதிர்மனுதாரர் நிர்வாகம் ஆலை மூட அனுமதி வேண்டி 15.02.2024 அன்று அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தது என்பது சரி. அந்த விண்ணப்பத்திற்கு நாங்கள் ஆட்சேபனை தெரிவித்து சமரச பேச்சு

16/7/26

வாத்தையில் கலந்து கொண்டோம் என்பது சரி. அந்த விண்ணப்பம் 16.08.2024 வரை அனுமதிக்கப்படவோ, தள்ளுபடி செய்யப்படவோ இல்லை என்றால் அந்த மனு நிராகரிக்கப்பட்டது. அவ்வாறு நிராகரிக்கப்பட்ட உத்தரவு 09.09.2024 அன்று தான் கிடைக்கப்பெற்று நானும் அதை என் தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதற்குமுன்பே நிராகரிக்கப்பட்டுவிட்டது. இதை தெரிவிக்கும் உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. நான் என் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளபடிக்கு பிரிவு 25 (O) படி அனுமதி வேண்டியதன் அடிப்படையில் தான் அவ்வாறு அரசாங்கத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் தவறு. 2022 முதல் 2024 வரை நான் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் பணிபுரியவில்லை என்பது சரி, நான் பணிபுரிய தயாராக இருந்தும் நிர்வாகம் பணி வழங்கவில்லை. ஒரு கணக்காண்டில் குறைந்தபட்சம் 30 நாட்கள் பணிபுரிந்தால் தான் போனஸ் கிடைக்கும் என்பது சரி. 2022 முதல் 2024 வரை ஒரு நாள் கூட பணிபுரியாத நிலையில் நான் போனஸ் கோருவது சட்டப்படி ஏற்கதகுந்தது அல்ல என்றால் தவறு. போனஸ் கிடைப்பதாக இருந்தாலும் போனஸ் வழங்கல் சட்டம் கீழ் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியிடம் தான் இதற்காக நான் முறையிட முடியும் என்றால் தவறு. எதிர்மனுதாரர் நிர்வாகம் தேசிய கம்பனிகள் தீர்ப்பாயத்தில் மனுதாக்கல் செய்தது என்றால் ஆமாம். அந்த மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் நிர்வாகம் யாருக்கும் எந்த தொகையும் வழங்க கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் தவறு. தொழிற்தகராறு சட்டப்படி இந்தமனுவை தாக்கல் செய்ய எனக்கு தகுதியில்லை என்றால் தவறு. அதற்கு தகுதி உண்டு என்று கொண்டாலும் பிரிவு 25 (O)(3) படி பணி

Sd/- 16/7/26

செய்த வருடங்களுக்கு ஒரு வருடத்திற்கு 15 நாட்கள் மட்டுமே ஊதியம் கிடைக்கத்தக்கது என்றால் தவறு. மனுவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் தவறு.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

K Shivkumar
16/7/26

Taken down by me in open court read over./ interpreted to the witness and acknowledged by him/her to be correct.

16/7/26

Presiding Officer (FAC)
Labour Court
Udhagamandalam